# Parenting Payment

Parenting Payment என்பது பிள்ளை வளர்ப்புச் செலவுகளில் பெற்றோர்களுக்கும் பாதுகாவலர்களுக்கும் உதவியாக இருப்பதற்காகக் கொடுக்கப்படும் வருமான ஆதரவுக் கொடுப்பனவாகும்.

## Parenting Payment பெறுவதற்கான தகுதி

குழந்தையைப் பிரதானமாகப் பேணிக்காப்பவருக்குப் Parenting Payment கொடுக்கப்படுகிறது. பெற்றோர்களில் ஒருவருக்கு அல்லது பாதுகாவலர் ஒருவருக்கு மட்டுமே இது கொடுக்கப்படும். கீழ் வரும் விடயங்கள் பொருந்தினால், பெற்றோர், பாட்டன்-பாட்டி, அல்லது வளர்ப்புப் பேணுநர் என்ற முறையில் Parenting Payment - இற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும்:

- நீங்கள் தனியாக இருந்து குறைந்தபட்சம் எட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தை ஒன்றைக் கவனித்து வந்தால், அல்லது
- உங்களுக்கு ஒரு துணைவர் இருந்து குறைந்தபட்சம் ஆறு வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தை ஒன்றை நீங்கள் கவனித்து வந்தால், மற்றும்
- உங்களது மற்றும் உங்கள் துணைவரது (உங்களுக்குத் துணைவர் இருந்தால்) வருமானம் மற்றும் சொத்துக்கள் குறிப்பிட்ட சில தொகைகளைவிடக் குறைவாக இருந்தால், மற்றும்
- வதிவிடநிலை குறித்த தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்தால்
- தேவைப்பட்டால், பங்கேற்புத் தேவைகளை உங்களால் பூர்த்தி செய்ய இயன்றால்.

## Parenting Payment - க்கான கொடுப்பனவுத் தொகையளவுகள்

நீங்கள் பெறும் Parenting Payment கொடுப்பனவுத் தொகையின் அளவு உங்களது குடும்ப சூழ்நிலைகளைப் பொறுத்தது. ஒவ்வொரு வருடமும் மார்ச்சு 20 மற்றும் செப்டம்பர் 20 – ஆம் திகதிகளில் இத் தொகை புதுப்பிக்கப்படும். மிகச் சமீபத்திய அளவு என்ன என்று தெரிந்துகொள்ள humanservices.gov.au/parentingpayment எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

## Parenting Payment - க்கான வருமான மற்றும் சொத்து சோதனைகள்

நீங்கள் பெறும் Parenting Payment கொடுப்பனவுத் தொகையின் அளவு உங்களது மற்றும் உங்களுடைய வாழ்க்கைத்துணைவரது (உங்களுக்கு இருந்தால்) வருமானம் மற்றும் சொத்துக்களைப் பொறுத்தது.

பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ உங்களுக்கு சொந்தமான சொத்து அல்லது உடைமையே உங்களது சொத்து எனப்படும். அவுஸ்திரேலியாவிற்கு வெளியில் உள்ள உங்களது சொத்துக்களும் உங்களுக்கு வரவேண்டிய கடன்களும் இதில் உள்ளடங்கும்.

ஒவ்வொரு வருடமும் மார்ச்சு 20, ஜூலை 1 மற்றும் செப்டம்பர் 20 – ஆம் திகதிகளில் வருமான மற்றும் சொத்து சோதனைகள் புதுப்பிக்கப்படுகின்றன. மிகச் சமீபத்திய அளவு என்ன என்று

தெரிந்துகொள்ள humanservices.gov.au/parentingpayment எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

# மேலதிகத் தகவல்கள்

Parenting Payment குறித்து மேலும் அறிந்துகொள்ள:

- humanservices.gov.au/parentingpayment எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்
- [Tamil/தமிழ்] மொழியில் பேச **131 202** எனும் இலக்கத்தை அழையுங்கள், அல்லது
- Service centre ஒன்றிற்குச் செல்லுங்கள்.

# Parenting Payment

Parenting Payment is income support for parents or guardians to help with the cost of raising children.

## Eligibility for Parenting Payment

Parenting Payment is paid to the principal carer of a child. Only one parent or guardian can receive the payment. You may qualify for Parenting Payment as a parent, grandparent, or foster carer, if:

- you are single and care for at least one child aged less than eight, or
- you have a partner and care for at least one child aged less than six, and
- the income and assets of both you and your partner (if you have one) are below certain amounts, and
- you meet residence requirements, and
- you are able to meet participation requirements if needed.

## Payment rates for Parenting Payment

The amount of Parenting Payment you get depends on your family situation. The rates are updated on 20 March and 20 September each year. For the latest rates visit **humanservices.gov.au/parentingpayment**

## Income and assets tests for Parenting Payment

The amount of Parenting Payment you get depends on the income and assets of both you and your partner (if you have one).

An asset is any property or possession you own either partly or wholly. It includes assets held outside Australia and debts owing to you.

The income and assets tests are updated on 20 March, 1 July and 20 September each year. For the latest rates visit **humanservices.gov.au/parentingpayment**

## More information

For more information about Parenting Payment:

- visit **humanservices.gov.au/parentingpayment**
- call **131 202** to speak to someone in your language, or
- visit a service centre.